ஒன்பதாம் வகுப்பு : மூன்றாம் பருவம்

தமிழ் முதல் தாள் வினாவிடைகள்

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா, பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.
ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி)
உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115

உரைநடை உலகம்: பழந்தமிழர் சமூக வாழ்க்கை

குறுவினாவிடை:

1.பழந்தமிழர் கொண்டாடிய விழாக்கள் யாவை?
தைத்திங்கள் நோன்பு , தை நீராடல் , கார்த்தகைத் திருநாள் , திருவாதிரை விழா , பங்குனி உத்திர விழா , இந்திர விழா , வேலன் வெறியாட்டு விழா , இளவேனில் விழா.

2.தமிழர் தம் வழிபாடுகள் யாவை?
திணைநிலத் தெய்வ வழிபாடு , இயற்கை வழிபாடு , நடுகல் வழிபாடு.

3.தமிழர் வழிபட்ட தெய்வங்கள் யாவை?
குறிஞ்சி - முருகன், முல்லை - திருமால், மருதம் - இந்திரன் , நெய்தல் -வருணன் , பாலை - கொற்றவை

4.பழந்தமிழர் கொண்டாடிய விழாக்கள் பற்றிக் கூறும் இலக்கியங்கள் யாவை?
அகநானூறு , கலித்தொகை , புறநானூறு.

5.பழந்தமிழர் பழக்கவழக்கங்கள் குறித்து எழுதுக.
தீ மூட்ட கல்லை உரசினர். காலத்தை ஞாயிறு , நிலவு , விண்மீன் , கோள்கள் , மலர்கள் பூக்கும் வேளை கொண்டு கணக்கிட்டனர்.முதுமக்கள் தாழியில் இறந்தோரை இட்டுப் புதைத்தனர். விருந்தினரை வீட்டுக்கு வெளியே வந்து அனுப்பினர்.

6.கஞ்சுகம் என்றால் என்ன?
பழந்தமிழர் மேற்சட்டையைக் கஞ்சுகம் என்றனர்.

7.துன்னக்காரர் என்பவர் யார்?
பழந்தமிழர் துணி தைப்பவரை துன்னக்காரர் என்பர்.

8.பழந்தமிழகப் பெண்கள் அணிந்த அணிகலன்கள் யாவை?
சிலம்பு , மேகலை , குழை , மோதிரம் , கடகம்

9.ஐம்படைத்தாலியை அணிந்தவர் யார்?
பழந்தமிழகச் சிறுவர் ஐம்படைத்தாலி என்னும் கழுத்தணி அணிந்தனர்.

10.பழந்தமிழகத்தில் மெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகள் எவ்வாறு இருந்தன?
பழந்தமிழகத்தில் மெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகள் பாம்பின் சட்டை , புகை , பாலாவி போலவும் இருந்தன.

11.இல்லறத்தாரின் தலையாய கடமை யாது?
விருந்தோம்பல் , சுற்றம் தழுவல் , ஏழைகளின் துன்பம் போக்குதல்

12.தமிழர் அறிந்திருந்த கலைகள் யாவை?
நாட்டியம் , நாடகம் , ஓவியம் , சிற்பம்

13.தமிழர் தம் கல்விச்சிறப்பை விளக்கும் நூல்கள் யாவை?
திருக்குறள் , பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

14.அக்காலக் கல்விச் சிறப்பினை விளக்குவன யாவை?
திருக்குறளில் கல்வி . கேள்வி , அறிவுடைமை போன்ற அதிகாரங்கள் அக்காலக் கல்விச் சிறப்பினை விளக்குவன.

15.பழந்தமிழகத்தில் கல்வி கற்கும் இடங்கள் யாவை?
மரத்தடி , ஊர் மன்றம் , ஆசிரியர் வீடு , வீட்டுத் திண்ணை

16.உமணர் என்பவர் யார்?
பழந்தமிழகத்தில் ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தவரே உமணர்.

17.வேத்தியல், பொதுவியல் - விளக்குக.
வேத்தியல் : மன்னருக்குரிய கூத்து
பொதுவியல் : மற்றவர்க்குரிய கூத்து

18.பழந்தமிழகத்தில் நடைபெற்ற தொழில்கள் யாவை?
தச்சுத் தொழில் , தேர் , வண்டி ,கதவு ,கட்டில் முதலிய பொருள்கள் செய்யும் தொழில் ,இரும்பு , பொன் கருவிகள் செய்யும் தொழில் ,உப்பு வணிகம் , மீன் பிடித்தல் தொழில் , உழவுத்தொழில்.

19.பழந்தமிழகத்தில் தோன்றிய இசைநூல்கள் யாவை?
முதுநாரை , முதுகுருகு , பெருநாரை , பெருங்குருகு, பஞ்சபாரதீயம் ,இசை நுணுக்கம் , பஞ்சமரபு.

சிறுவினா விடை

1.பழந்தமிழர் உலகமக்களை உறவினராய் எண்ணி வாழ்ந்தனர் - இத்தொடர் உணர்த்தும் கருத்தை எழுதுக.
நாடு , மொழி , இனம் , மதம் , சாதி ஆகியவற்றைப் பாராது வாழ்பவனே சிறந்த மனிதன். எனவே தான் பழந்தமிழர் உலக மக்கள் அனைவரையும் உறவினராய் எண்ணி வாழ்ந்தனர்.

2.பழந்தமிழகத்தில் காணப்பட்ட இசை மற்றும் கூத்துக் கலைஞர்கள் யாவர்?
இசைக் கலைஞர் : பாணன் , பாடினி
கூத்துக் கலைஞர் : விறலியர் , கூத்தர்

3.பழந்தமிழகத்தில் காணப்பட்ட கல்வி குறித்து எழுதுக.
திருக்குறளில் கல்வி . கேள்வி , அறிவுடைமை போன்ற அதிகாரங்கள் அக்காலக் கல்விச் சிறப்பினை விளக்குவன. மரத்தடி , ஊர் மன்றம் , ஆசிரியர் வீடு , வீட்டுத் திண்ணை பழந்தமிழகத்தில் கல்வி கற்கும் இடங்களாக விளங்கின. எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது. எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. மருத்துவம் , வானியல் போன்றவை கற்பிக்கப்பட்டன. எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர்.

4.பண்டைய தமிழரின் திருமண முறை யாது?
பெண்ணுக்கு மணமகன் பரிசளிப்பது வழக்கத்தில் இருந்தது. மணநிகழ்வின் போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி , தூய ஆடை அணிகலன்களை அணிவித்தனர். மணமுழவு ஒலிக்க மணமகளைத் தலைவனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்கினர்.

நெடுவினா விடை

1.நீங்கள் அறிந்து கொண்ட தமிழரின் தன்னேரில்லாத பண்புகளை எழுதுக.
1.அறனெனப்பட்டதே இல்லறம் 2.உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்ற எளிய வாழ்க்கை. 3.செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்க்கும் உயர் பண்பு
4.கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைவு படாது வாழும் கொள்கை 5.களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே என்ற வீரம் 6.அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

www.padasalai.net

என்னும் தூய அன்பு 7.யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப்பொதுமை - ஆகியன நான் அறிந்து கொண்ட தமிழரின் தன்னேரில்லாத பண்புகளாகும்.

கவிதைப்பேழை : சீவக சிந்தாமணி

குறுவினா விடை

1.கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
கருக்கொண்ட பச்சைப் பாம்பு நெற்பயிர்களின் தோற்றத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

2.ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
சிலப்பதிகாரம் , மணிமேகலை , குண்டலகேசி , வளையாபதி, சீவக சிந்தாமணி

3.நல்லவர்களின் பணிவைப் போல் உள்ளது எது?
பயிர்கள் முற்றியவுடன் சாய்ந்து இருப்பது நல்லவர்களின் பணிவைப் போல் உள்ளது.

4.சீவக சிந்தாமணி - குறிப்பு வரைக.
ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம். மணநூல் என்று அழைக்கப்படுகிறது. 13 இலம்பகங்களைக் கொண்டது.

5.திருத்தக்கதேவர் குறிப்ப வரைக.
சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர். சமணர்.காலம் : கி.பி. 9. சீவசிந்தாமணி பாடுவதற்கு முன்பே நரிவிருத்தம் பாடியவர்.

சிறு வினா விடை

1.ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார்?
1.ஆயிரம் வகையான உணவுகள் 2.உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரம் 3.மகளிர் ஒப்பனை செய்ய மணிமணிமாடம் ஆயிரம் 4.கம்மியர் ஆயிரம் பேர் 5.திருமணங்கள் ஆயிரம் இப்படி ஆயிரம் நிகழ்வுகள் ஏமாங்க நாட்டில் குறைவின்றி நடக்கின்றன.

நெடுவினா-விடை

1.ஏமாங்க நாட்டு வருணனைகளை நும் ஊர் குறித்த வளங்களோடு ஒப்பிடுக.

| ஏமாங்க வருணனை | ஏங்கள் ஊர் வளம் |
| --- | --- |
| 1.தென்னை மரத்திலிருந்து விழுகின்ற தேங்காய் தேனடையைக் கிழித்து பலாப்பழத்தைப் பிளந்து , மாங்கனியைச் சிதற வைத்து , வாழைப்பழத்தை உதிரச் செய்தது | 1.தேங்காய்கள் வயல் ஓடைகளில் விழுந்து பூக்களைத் தழுவிச்செல்கிறது. |
| 2.வள்ளல்களைப் போன்றது 2.வெள்ளம். அது மலையில் இருந்து செல்வத்தை அடித்து வந்து ஊர்மக்களுக்கு விளங்கும் வகையில் பாய்கின்றது. | 2.பூக்களையும் பழங்களையும் வெள்ளம் அடித்து வந்து ஊரினில் சேர்க்கும். |
| 3.எருமைகளும் எருதுகளும் பேரொலி எழுப்புகின்றன , அது கேட்டு வாரல் மீன்கள் ஓடுகின்றன. | 3.ஏர் மாடுகளின் சத்தம் வயலில் எங்கும் கேட்கும். |

கவிதைப்பேழை : முத்தொள்ளாயிரம்

குறுவினாவிடை:
1.முத்தொள்ளாயிரம் - குறிப்பு வரைக.
வெண்பாவால் எழுதப்பட்ட நூல். மூவேந்தர்களைப் பற்றிய 900 பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம். நூல் முழுமையும் கிடைக்கவில்லை. எழுதியவர் தொகுத்தவர் பெயர் அறிய இயலவில்லை.

2.அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவில - இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?
சேறு - அள்ளல் வயல் - பழனம்

3.கொற்கை நகரில் முத்துக்களைப் போல் உள்ள பொருள்களாகக் காட்டப்படுவன எவை?
சங்குவின் முட்டைகள் , புன்னை மொட்டுக்கள் , பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள்.

சிறு வினா விடை

1.சேர , சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
சேரர் : வயல்களில் செவ்வாம்பல் மெல்ல விரிந்தன. அதனைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீர் தீப்பிடித்து விட்டது என்று நினைத்து தம் குட்டிகளைச் சிறகில் மறைத்து வைத்தன. பகைவர் அஞ்சும் சேர நாட்டில் இந்த அச்சமும் இருக்கின்றது.

சோழர்: உழவர்கள் நெற்போர் மீது ஏறி 'நாவலோ' என்று கூவி மற்ற உழவர்களை அழைப்பர்.இது போரில் யானை மீது நின்று 'நாவலோ' என்று கூவி மற்ற வீரர்களை அழைப்பது போல் இருந்தது. இத்தகு வளம் சோழ நாட்டில் காணப்பட்டது.

பாண்டியர்: கொற்கை நகரில் முத்துக்களைப் போல் சங்குவின் முட்டைகள் , புன்னை மொட்டுக்கள் , பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள் ஆகியவை இருந்தன. இத்தகைய வளம் பாண்டியர் நாட்டில

உரைநடை உலகம்: பெரியாரின் சிந்தனைகள்

குறுவினா விடை
1.பகுத்தறிவு என்றால் என்ன?
எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன் ? எப்படி? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பி , அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

2.தந்தை பெரியார் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறார்?
வெண்தாடி வேந்தர் , பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர் , ஈரோட்டுச் சிங்கம்

3.எது மனிதனுக்குத் தேவையில்லை என்று வலியுறுத்துகிறார் பெரியார்?
சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப்போவதில்லை. அதனால் வீண் சண்டைகளும் குழப்பங்களும் தான் மேலோங்குகிறது . அத்தகு சாதி . மனிதனுக்குத. தேவையில்லை என்று வலியுறுத்தினார் பெரியார்.

4.பெரியாரின் சிந்தனை புரட்சியை ஏற்படுத்திய துறைகள் யாவை?
சமூகம் , மொழி , கல்வி , பண்பாடு , பொருளாதாரம்.

5.சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்று பெரியார் கூறக் காரணம் யாது?
சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது. மற்றவர்களின் உரிமையைப் பறிக்கின்றது. மனிதர்களை இழிவுபடுத்துகின்றது.

6.பெரியார் எதனையெல்லாம் எதிர்த்தார்?
இந்தித்திணிப்பு , குலக்கல்வித்திட்டம் , தேவதாசி முறை , கள்ளுண்ணல் , குழந்தைத் திருமணம் , மணக்கொடை

7.பெரியார் எதனைக் கடுமையாக எதிர்த்தார்?
மனப்பாடம் மற்றும் மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தேர்வு முறையை பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

www.padasalai.net

8.பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் கருதியது எதனை? ஏன்?
திருக்குறளைப் பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் கருதினார். இந்நூலில் அறிவியல் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான முறையில் அமைந்திருப்பதே காரணம்.

9.பெரியார் சீரமைத்த எழுத்துகள் யாவை?
'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

10.பெரியார் தோற்றுவித்த இயக்கம் யாது? அதன் தோற்றம் எப்போது?
சுயமரியாதை இயக்கம். 1925

11.பெரியார் நடத்திய இதழ்கள் யாவை?
குடியரசு, விடுதலை , உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

12.ஈ.வெ.ராவுக்குப் பெரியார் பட்டம் எப்போது கொடுக்கப்பட்டது?
13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்குப் பெரியார் பட்டம் கொடுக்கப்பட்டது.

சிறுவினாவிடை

1.சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்பு படுத்தி எழுதுக.
விழாக்கள் மற்றும் சடங்குகளால் மூடப்பழக்கம் வளர்வதோடு , வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற விழாக்கள் மற்றும் சடங்குகளைத் தவிர்க்க வேண்டும் என்றார்.திருமணத்தை எளிமையாக சீர்திருத்த முறையில் நடத்த வேண்டும் என்றார். விழாக்கள், திருமணமங்கள் மற்றும் சடங்குகள் நடத்த கடன் வாங்கி செலவு செய்து , கடன்காரர்களிடம் மாட்டிக் கொண்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது. பெரியார் சொன்னதைக் கடைபிடித்திருந்தால் இந்நிலை வராது,

2.மதம் குறித்து பெரியார் எழுப்பிய பகுத்தறிவு வினாக்கள் யாவை?
மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கு ஏற்படுத்தப்பட்டன. ஆனால் , இன்று மதத்தின் நிலை என்ன? சிந்தித்துப் பாருங்கள். மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை வைக்கிறார்.

3.கல்வி குறித்த பெரியாரின் சிந்தனைகள் யாவை?
கல்வி மக்களிடம் பகுத்தறிவு ,சுயமரியாதை , நல்லொழுக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தவேண்டும்.மேன்மை வாழ்வு வாழ்வதற்கேற்ப தொழில் , அலுவல் பார்க்க கல்வி பயன்பட வேண்டும்.அறிவியலுக்குப் புறம்பான செய்தியையும் , மூடப்பழக்கங்களையும் பள்ளிகளில் கற்றுத்தரக் கூடாது.சுயசிந்தனை , தன்னம்பிக்கை வளர்க்கும் கல்வியே கற்றுத் தரவேண்டும்.அனைவருக்கும் கல்வி கற்றுத்தர வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும்.

4.பெரியார் விதைத்த விதைகள் யாவை?
கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு, பெண்களுக்கு இடஒதுக்கீடு , பெண்களுக்கான சொத்துரிமை , குடும்ப நலத்திட்டம் . கலப்புத் திருமணம் , சீர்திருத்தத் திருமணச்சட்டம்.

5.தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் யார்?
யுனெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரைத் தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் எனப் பாராட்டிப் பட்டம் வழங்கியது.

நெடுவினா - விடை

1.மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.
இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்க வேண்டும். மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம் , பகுத்தறிவு , வளர்ச்சி , நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்.மதம் , கடவுள் தொடர்பற்ற இலக்கியம் , யாவருக்கும் பொதுவான அறிவைத் தரும் இலக்கியம் , அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலமே மொழி . இலக்கியம் மேன்மை அடையும்.

திருக்குறளைப் பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் கருதினார். இந்நூலில் அறிவியல் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான முறையில் அமைந்திருப்பதே காரணம் என்றார் பெரியார். தமிழில் 'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

கவிதைப்பேழை : ஒளியின் அழைப்பு

குறுவினா விடை:

1.ந.பிச்சமூர்த்தி - குறிப்பு வரைக
புதுக் கவிதையின் தந்தை என்று போற்றப்படுபவர். வழக்குரைஞராக இருந்து இந்து சமய அறநிலையத் துறை அலுவலராகவும் பணியாற்றியவர்.ஹனுமான் , நவஇந்தியா ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார்.
2.கமுகு மரம் எதனைத் தேடியது?
கமுகு மரம் விண்ணிலிருந்து வரும் கதிரவன் உயிர்ப்பைத்(அமுதை) தேடியது.
3.கமுகு மரம் எதனைத் துளைத்து நின்றது?
கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது.
4.கமுகு மரம் எதனை வெறுத்து , எதனை உயர்த்தி நின்றது?
கமுகு மரம் பெருமரத்தின் நிழலை வெறுத்தது ,உச்சிக் கிளையை மேலே உயர்த்தி நின்றது.
5.கமுகு மரம் பெருமரத்துடன் போட்டிபோடக் காரணம் யாது?
அமுதத்தை நம்பி , ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டிபோடக் காரணம் ஆகும்.
6.கமுக மரம் வென்றதற்குக் காரணம் யாது?
துணிச்சல் , முயற்சி , நம்பிக்கை

சிறு வினா விடை

1.அதுவே வாழ்க்கைப் போர் - எது?
கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது. கமுகு மரம் விண்ணிலிருந்து வரும் கதிரவன் உயிர்ப்பைத்(அமுதை) தேடியது. கமுகு மரம் பெருமரத்தின் நிழலை வெறுத்தது ,உச்சிக் கிளையை மேலே உயர்த்தி நின்றது. அமுதத்தை நம்பி , ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டிபோடக் காரணம் ஆகும். இதுவே வாழ்க்கைப் போர்.

நெடுவினா விடை

1.வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?
கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது. கமுகு மரம் விண்ணிலிருந்து வரும் கதிரவன் உயிர்ப்பைத்(அமுதை) தேடியது. கமுகு மரம் பெருமரத்தின் நிழலை வெறுத்தது ,உச்சிக் கிளையை மேலே உயர்த்தி நின்றது. அமுதத்தை நம்பி , ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டிபோடக் காரணம் ஆகும். இதுவே வாழ்க்கைப் போர். கமுகு மரம் பெருமரத்துடன் முட்டி மோதி துணிச்சல் , முயற்சி , நம்பிக்கை கொண்டு போராடி வென்றது.

அதுபோலவே வாழ்க்கைப் போரில் செயல்பட்டால் வெற்றிபெறலாம் என்கின்ற வழியைக் கமுக மரம் வாயிலாக ஆசிரியர் உணர்த்துகிறார்.

www.padasalai.net

கவிதைப்பேழை: தாவோ தே ஜிங்
குறுவினா விடை

1.லாவோட்சு - குறிப்பு வரைக.
லாவோட்சு , சீனாவில் பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர். கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர். “தாவோவியம் “ என்னும் சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர். தாவோவியம் வலியுறுத்தும் இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தார்.

2.தாவோ தே ஜிங் ‘ இன்னொரு பக்கம் ‘ என்று எதைக் குறிப்பிடுகிறார்?
தாவோ தே ஜிங் ‘ இன்னொரு பக்கம் ‘ என்று இருத்தலின்மையைப் பயன்படுத்திக் கொள்வதைக் (வெற்றிடமே பயன்படுகின்றது) குறிப்பிடுகிறார்.

சிறு வினா விடை
1.வெற்றிடமே பயன்படுகின்றது என்பதை தாவோ தே ஜிங் எவ்வாறு விளக்குகிறது.
சக்கரம் பல ஆரங்களைக்கொண்டது.. வெற்றிடத்ததை நடுவே வைத்தே சுழல்கிறது. அழகிய பானையே ஆனாலும் வெற்றிடமே பயன்படுகின்றது. சன்னலும் கதவும் கூட வெற்றிடமே. அதுவே நமக்குப் பயன்பாடு. சுவர்களுக்கு இடையே உள்ள வெற்றிடமே அறையாகப் பயன்படுகின்றது.உருப்பொருள் உண்மையானாலும் வெற்றிடமே பயனாகிறது.வெற்றிடம் பயன்படுகின்ற போது நாம் வெற்றி பெறத் தடையில்லை.

கவிதைப்பேழை : யசோதர காவியம்

1.யசோதர காவியம் குறிப்பு தருக.
ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று. வடமொழித் தழுவல் நூல் இது.அவந்தி நாட்டு மன்னன் யசோதரனைப் பற்றியது. 5 சருக்கங்களைக் கொண்டது.பாடல் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் கூறுவர்

2.யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
அவந்தி நாட்டு மன்னன் யசோதரன்.

சிறு வினாவிடை

1.நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை ?
நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும். நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்க வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும். ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும். இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமென்றால் நன்னெறியினைக் காக்க வேண்டும்.

2.யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறியைத் திருக்குறளுடன் ஒப்பிடுக.
நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்.

“ஒல்லும் வகையால் இறவினை யோவதே

செல்லும்வா யெல்லாஞ் சிறப்பு”
நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்க வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.

“மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய

பிறத்தல் அதனான் வரும்.”

ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.

“ எப்பொருள் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு”
இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமென்றால் நன்னெறியினைக் காக்க வேண்டும்.

3.பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.
சூளாமணி ,பெருங்கதை ,இரட்சண்ய யாத்ரிகம் ,புரட்சிக் காப்பியம் , மனோன்மணீயம் , கம்பராமாயணம்

உரைநடை உலகம்: விரிவாகும் ஆளுமை

குறு வினா விடை

1.எது நம் தமிழரின் இயல்பு?
உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் இயல்பு.

2.இலத்தீன் புலவர் தெறென்ஸ் கூற்று யாது?
நான் மனிதன் ; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று என்பதே இலத்தீன் புலவர் தெறென்ஸ் கூற்று ஆகும்.

3.குறிக்கோள் இல்லாதவர் பற்றி ஆலந்தூர் கிழார் கூறுவது யாது? (அல்லது) “ பூட்கையில்லோன் யாக்கை போல “ தொடர் பொருள் கூறுக.
குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப்பிண்டம் என்பதை “ பூட்கையில்லோன் யாக்கை போல “ என்று புறநானூற்றில் ஆலந்தூர் கிழார் கூறுகிறார்.

4.சீன தத்துவஞானிகள் யாவர்? 1.லாவோட்சு 2.கன்பூசியசு

5.கிரேக்கத் தத்துவஞானிகள் யாவர்?
1.பிளேட்டோ 2.அரிஸ்டாட்டில்

6.ஒருவனுடைய வாழ்க்கை பண்புடைய வாழ்க்கையாகின்றது எப்போது?
பிறருக்காகப் பணி செய்வதால் தான் ஒருவனுடைய வாழ்க்கை பண்புடைய வாழ்க்கையாகின்றது.

7.பிறர்நலக் கொள்கையை முதன் முதலில் பரப்புவதற்குக் காரணமாய் அருத்தவர்கள் யாவர்?
தமிழ்நாட்டுப் புலவர் மற்றும் பாணர்

8.பாணர் என்பவர் யார்?
தமிழ் வழங்கும் இடமெங்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் வாழ்த்தும் இசைக்கலைஞர்கள் பாணர்கள்.

9.மொழிபெயர்தேசம் (அல்லது) மொழிமாறும் நாடு - விளக்குக.
பிறநாடுகளைக் குறிப்பிடும்போது வேற்று நாடு , பிற நாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு - மொழிபெயர்தேசம் என்றே புலவரும் பாணரும் வரையறுத்தனர்.

10.எதனால் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத கொள்கை உருப்பெருகின்றது?
அன்பு வாழ்க்கையிலும் பிறருடன் கலந்து வாழும் முறைகளிலும் பிறர் நலம் பேணுவதிலும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத கொள்கை உருப்பெருகின்றது.

11.உண்டாலம்ம இவ்வுலகம் - என்ற புறப்பாட்டு உணர்த்தும் பண்பு யாது?
பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லையென்றால் , நாம் வாழ்வத அரிது.பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும்.

12.தமிழ்ச்சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
தமிழ்ச்சான்றோன் சமுதாயத்திலேயே வாழ்ந்து தன்னால் இயன்ற வரை சமுதாயத்திற்குப் பல நன்மைகள் செய்வான். ஆனால், உரோமையரின் சான்றோர் சமுதாயத்திலிருந்து விலகி , தன் சொந்தப் பண்புகளையே வளர்க்க வேண்டும்.

13.உரோமையர் என்பவர் யார்?
இத்தாலி நாட்டினர் உரோமையர். சான்றோன் பற்றி இலக்கணம் வகுத்தவர்.

14.சாப்பியன்ஸ் (அல்லது) சான்றோன் பற்றிய உரோமையரின் கருத்து யாது?
உரோமையரின் சான்றோர் சமுதாயத்திலிருந்து விலகி , தன் சொந்தப் பண்புகளையே வளர்க்க வேண்டும்.

15.ஒன்றே உலகம் என்னும் கொள்கை கொண்ட வெளிநாட்டறிஞர் யாவர்? செனக்கா , மார்க்ஸ் அரேலியஸ்

16.மக்கட் தன்மைக்காக எழுதப்பட்ட நூல் எது?
மக்கள் அனைவரும் மக்கட் தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள்.

17.திருவள்ளுவர் குறித்து போப்பின் கருத்து யாது?
ஜி.யு.போப் திருவள்ளுவரை “ உலகப்புலவர் “ என்று போற்றுகிறார்.

சிறு வினா விடை

1.உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துக்களாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?
மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள் ; பிறப்போ , சாதியோ , சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது. இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைபிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. திருக்குறளைப் பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடும் போது “ இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பதரிது” என்பார்.

2.கோர்டன் ஆல்பர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதன என்கிறார் கோர்டன் ஆல்பர்ட். முதலாவது மனிதன் , தன் ஈடுபாடுகளை வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்.பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக் கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச்செய்து செழுமைப்படுத்தவேண்டும்.இரண்டாவது ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்து கெதள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும்.மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் தத்துவத்தைக் கடைபிடித்து நடத்தல் வேண்டும்.

3.விரிவாகும் ஆளுமையை எவ்வாறு அடையலாம்?
விரிவாகும் ஆளுமையை அடைய திருவள்ளுவர், “ உள்ளற்க உள்ளம் சிறுகுவ “ , “ உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் “ ஆகியவற்றைக் கற்பிக்கிறார்.

4.உலகத் தமிழ் மாநாடுகள் பற்றி எழுது?

| மாநாடு | நாடு | ஆண்டு , இடம் |
|---|---|---|
| 1 | மலேசியா | 1966 - கோலாலம்பூர் |
| 2 | இந்தியா | 1968 - சென்னை |
| 3 | பிரான்சு | 1970 - பாரிசு |
| 4 | இலங்கை | 1974 - யாழ்ப்பாணம் |
| 5 | இந்தியா | 1981 - மதுரை |
| 6 | மலேசியா | 1987 - கோலாலம்பூர் |
| 7 | மொரிசியசு | 1989 - மொரிசியசு |
| 8 | இந்தியா | 1995 - தஞ்சாவூர் |
| செம்மொழி மாநாடு | இந்தியா | 2010 - கோவை |

நெடுவினா விடை

1.தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகளார் வழி விளக்குக.

உலகநாடுகளையும் மக்களையும் உட்படுத்தி பாராட்டுவது நம் இயல்பு. அதனையே “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற புறநானூறு வரிகளையும், யாதானும் நாடாமல்… என்னும் குறட்பா வரிகளும் கூறுகின்றன.

மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள் ; பிறப்போ , சாதியோ , சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது. இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைபிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. திருக்குறளைப் பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடும் போது “ இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பதரிது” என்பார்.

கவிதைப்பேழை : அக்கறை

குறு வினா விடை

1.கல்யாண்ஜி - குறிப்பு வரைக.
இயற்பெயர் : கல்யாண சுந்தரம்
புனைப்பெயர் : வண்ணதாசன் . கல்யாண்ஜி
படைப்புகள் : புலரி , முன்பின் , ஆதி , அந்நியமற்ற நதி , மணல் ஆகியவை கவிதை நூல்கள். அகமும் புறமும் (கட்டுரைத்தொகுப்பு) , தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள் , உயரப் பந்தல் , ஒளியிலே தெரிவது (சிறுகதை)

சிறப்பு : 2016ல் சாகித்ய அகாதெமி பரிசு - ஒரு சிறு இசை (சிறுகதைத் தொகுப்பு நூல்)

சிறு வினா விடை

1.பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம்: கல்யான்ஜியின் அக்கறை என்னும் கவிதைத் தலைப்பில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளது.

பொருள் விளக்கம்: மிதிவண்டியில் இருந்து விழுந்த தக்காளிகள் சாலையில் விழுந்து நசுங்கிக் கொண்டு இருந்தது . அங்குப் போவோர் வருவோர் தலைக்கு மேல் வேலை இருப்பதாய் செல்வதைப் பார்க்கையில் பழங்களை விடவும் நசுங்கிப் போனது எது என்றால் மற்ற மனிதர்கள் மீது அக்கறை இல்லாததால் தான் என்கிறார் கல்யாண்ஜி.

2.கல்யாண்ஜியின் அக்கறை கவிதையின் கருத்துகள் யாவை?

மிதிவண்டியில் தக்காளி கூடையில் இருந்து விழுந்த தக்காளிகள் சாலையில் விழுந்து நசுங்கிக் கொண்டு இருந்தது . அங்குப் போவோர் வருவோர் தலைக்கு மேல் வேலை இருப்பதாய் சொல்லிக் கொண்டு செல்வதைப் பார்க்கையில் பழங்களை விடவும் நசுங்கிப் போனது எது என்றால் மற்ற மனிதர்கள் மீது அக்கறை இல்லாததால் தான் என்கிறார் கல்யாண்ஜி.

கவிதைப்பேழை :குறுந்தொகை.

குறு வினா விடை

1.குறுந்தொகை குறிப்பு வரைக.

எட்டுத்தொகை நூல்களுல் அகப்பொருள் சார்ந்த நூல்.

401 பாடல்களைக்கொண்டது.

அடி எல்லை: 4 முதல் 8 அடிவரை

2.பெருங்கடுங்கோ - குறிப்பு எழுதுக.

சேர மரபைச் சார்ந்த மன்னர்.

கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் பாலை பாடிய பெருங்கடுங்கோ எனப்பட்டார்.

3.குறுந்தொகை - பெயர்க்காரணம் கூறுக.

குறுகிய பாடல்களின் தொகுப்பு குறந்தொகை. 4 அடி முதல் 8 அடி வரை உள்ள செய்யுட்களைத் தொகுத்துக் குறந்தொனை என்று பெயர் வைத்தனர்.

4.பிடி பசி களைஇய பெருங்கைவேழம் - இவ்வடியில் உள்ள இலக்கணக்குறிப்பைக் கண்டறிக.

பிடிபசி - ஆறாம் வேற்றுமைத்தொகை.
களைஇய - சொல்லிசையளபெடை
பெருங்கை - பண்புத்தொகை

5.இறைச்சி என்றால் என்ன?

இறைச்சி பாடலில் உள்ள கருப்பொருளில் அமையும். இறைச்சி பெரும்பாலும் விலங்கு , பறவை போன்ற உயிரினங்களில் அமையும், கூறுவோரின் விருப்பத்தை நேரே உணர்த்தாமல் குறிப்பாக உணர்த்துவது இறைச்சி.

சிறுவினா விடை

1.'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக விளக்குக?

பெண்யானையின் பசியைப்போக்க ஆண்யானை 'யா' மரத்தின் பட்டையை உரித்துத் தன் அன்பை வெளிப்படுத்தும்.

உட்கருத்து: மேற்கண்ட காட்சியைக் கண்ணுற்ற தலைவனுக்கு உன் நினைவு வரும்.எனவே அவன் உன்னிடம் விரைந்து வருவான்.

2.தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது என்னும் துறையில் அமைந்த பெருங்கடுங்கோவின் பாடற்கருத்தை எழுதுக.

தோழி தலைவியிடம் , " தலைவன் உன்னிடம் பெருவிருப்பம் உடையவன். மீண்டும் வந்து அன்புடன் இருப்பான். பொருளை ஈட்ட பிரிந்து சென்ற வழியில் பெண்யானையின் பசியைப்போக்க ஆண்யானை 'யா' மரத்தின் பட்டையை உரித்துத் தன் அன்பை வெளிப்படுத்தும். இக்காட்சியைக் கண்ணுற்ற தலைவனுக்கு உன் நினைவு வரும்.எனவே அவன் உன்னிடம் விரைந்து வருவான்.

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| 1.சீவகசிந்தாமணி | 1.திருத்தக்கதேவர் |
| 2.முத்தொள்ளாயிரம் | 2.அறிய இயலவில்லை |
| 3.நரிவிருத்தம் | 3. திருத்தக்கதேவர் |
| 4.ஒளியின் அழைப்பு | 4.ந.பிச்சமூர்த்தி |
| 5.தாவோ தே ஜிங் | 5.லாவோட்சு |
| 6.யசோதர காவியம் | 6. அறிய இயலவில்லை |
| 7.அக்கறை | 7.கல்யாண்ஜி(அ)கல்யாணசுந்தரம் |
| 8.ஒரு சிறு இசை | 8.கல்யாண்ஜி(அ)கல்யாணசுந்தரம் |
| 9.குறுந்தொகை | 9.பெருங்கடுங்கோ |

| சொல் - பொருள் | |
|---|---|
| தேங்கு - தேங்காய் | விண் -வானம் |
| வருக்கை - பலாப்பழம் | ரவி - கதிரவன் |
| மால்வரை - பெரிய மலை | அறம் - நற்செயல் |
| கழனி - வயல் | வெகுளி - சினம் |
| அடிசில் - சோறு | ஞானம் - அறிவு |
| கொடியன்னார் - மகளிர் | நசை - விருப்பம் |
| அள்ளல் - சேறு | பிடி - பெண்யானை |
| பழனம் - வயல் | வேழம் - ஆண்யானை |
| நந்து - சங்கு | யா - பாலை நில மரம் |
| கமுகு - பாக்கு | ஆறு - வழி |

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா, பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.

ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115

www.padasalai.net